ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2360/59 - 2023 නොවැම්බර් මස 30 වැනි බ්‍රහස්පතින්දා - 2023.11.30

*2360/59 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 30 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 98 ஆம் உறுப்புரையின் (8) ஆம் உப உறுப்புரையின் கீழான கட்டளை

2021 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க, தேருநர்களைப் பதிவு செய்தல் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்ட 1980 ஆம் ஆண்டின் 44 ஆம் இலக்க தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய 2023 ஆம் ஆண்டின் யூன் மாதம் முதலாம் திகதியில் ஆரம்பித்து 2023 ஆம் ஆண்டின் செத்தெம்பர் மாதம் முப்பதாம் திகதி வரையான காலப் பகுதிக்குரிய 2023 (2) குறைநிரப்பு தேருநர் இடாப்பு 2023 ஒற்றோபர் இரண்டாம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டதாக இலக்கம்: 2352/04 மற்றும் 2023.10.02 ஆம் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக அறிவிக்கப்பட்டது.

02. 2023 ஒற்றோபர் மாதம் 02 ஆம் திகதியன்று 2022 ஆம் ஆண்டின் பிரதான இடாப்பு, 2022 (1) குறைநிரப்பு தேருநர் இடாப்பு, 2022 (2) குறைநிரப்பு தேருநர் இடாப்பு, 2022 (3) குறைநிரப்பு தேருநர் இடாப்பு மற்றும் 2023 (1) குறைநிரப்பு தேருநர் இடாப்பு மற்றும் 2023 (2) குறைநிரப்பு தேருநர் இடாப்பு செல்லுபடியாக இருப்பதுடன் அதற்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 98 ஆவது உறுப்புரையின் (8) ஆவது உறுப்புரையின் கீழ் தேர்தல் ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், தேர்தல் ஆணைக்குழுவினால் இந்தக் கட்டளை ஊடாக, 97 ஆவது உறுப்புரையின் கீழான பிரகடனத்தின் பிரகாரம் மற்றும் 98 ஆவது உறுப்புரைப் பிரகாரம், இங்கு அட்டவணையின் I ஆவது நிரலில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவு செய்வதற்கு உரித்துடைய உறுப்பினர்களின் எண்ணிக்கை அந்த அட்டவணையின் II ஆவது நிரலில் நேரொத்த குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள எண்ணிக்கையாக இருத்தல் வேண்டுமென அத்தாட்சிப்படுத்தப்படுகின்றது.

| ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க, | எம். ஏ. பீ. சீ. பெரேரா, | அமீர் பாயிஸ், | அனுசுயா சண்முகநாதன், |
|---|---|---|---|
| தவிசாளர், | உறுப்பினர், | உறுப்பினர், | உறுப்பினர், |
| தேர்தல் ஆணைக்குழு. | தேர்தல் ஆணைக்குழு. | தேர்தல் ஆணைக்குழு. | தேர்தல் ஆணைக்குழு. |

தேர்தல் ஆணைக்குழு,
ராஜகிரிய,
2023, நவெம்பர் 30.

1A - G 40890 — 21 (2023/11)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை**

| *நிரல் I*<br>*தேர்தல் மாவட்டத்தின் பெயர்* | *நிரல் II*<br>*ஒவ்வொரு தேர்தல் மாவட்டத்திற்கும் தெரிவுசெய்வதற்கு உரித்துடைய உறுப்பினர்களின் எண்ணிக்கை* |
|---|---|
| 01-கொழும்பு | 19 |
| 02-கம்பஹா | 18 |
| 03-களுத்துறை | 10 |
| 04-மஹநுவர | 12 |
| 05-மாத்தளை | 5 |
| 06-நுவரெலியா | 8 |
| 07-காலி | 9 |
| 08-மாத்தறை | 7 |
| 09-அம்பாந்தோட்டை | 7 |
| 10-யாழ்ப்பாணம் | 7 |
| 11-வன்னி | 6 |
| 12-மட்டக்களப்பு | 5 |
| 13-திகாமடுல்ல | 7 |
| 14-திருகோணமலை | 4 |
| 15-குருநாகல் | 15 |
| 16-புத்தளம் | 8 |
| 17-அநுராதபுரம் | 9 |
| 18-பொலன்னறுவை | 5 |
| 19-பதுளை | 9 |
| 20-மொனராகலை | 6 |
| 21-இரத்தினபுரி | 11 |
| 22-கேகாலை | 9 |
| | 196 |

EOG 11-0348